சுருக்கம்

பகுதி II திட்டம் 2010–2011 – நீர்வள ஆதாரத் துறை – சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வெள்ளத்தினால் பழுதடைந்த பூவந்தி ஏரியை நிரந்தரமாக புதுப்பிக்கும் பணியை 2010–2011ம் ஆண்டிற்கு பகுதி II திட்டத்தின்கீழ் செயல்படுத்துதல் – ரூ.66.00 இலட்சம் நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித்(ப்பி 1)துறை

அரசாணை (நிலை) எண் 154

நாள் 27.05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041,
வைகாசி 13

படிக்கப்பட்டது–

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்டம் உருவாக்கம்), கடித எண் எப் / 7575/ பகுதி II / 2010-2011, நாள் 27.01.2010.

ஆணை:

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், பூவந்தி கிராமத்தில் உள்ள பூவந்தி ஏரியானது ஒரு பெரிய முறைப்பாசன ஏரியாகும். இந்த ஏரி விரகனூர் கதவணையிலிருந்து இடதுபுற பிரதானக் கால்வாய் மூலமும், அதன் தனியான நீர்ப்பிடிப்பு பகுதி மூலமும் தண்ணீர் பெறுகிறது. டிசம்பர் 2005ல் திருப்புவனம் பகுதியில் ஏற்பட்ட கடும் மழையால் இந்த ஏரியின் வலது புற கலிங்கு சுமார் 20 மீட்டர் நீளத்திற்கு சேதமடைந்துள்ளதோடு, அதன் அருகில் உள்ள கரையும் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. மேலும், இரண்டாவது மதகும் மிகவும் சேதம் அடைந்துள்ளது. எனவே, 2010–2011ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் இந்த கலிங்கினை முழுமையாக இடித்துவிட்டு, ஒரு புதிய கலிங்கினை கட்டவும், அடித்துச் செல்லப்பட்ட கரையை பலப்படுத்தவும், இரண்டாவது மதகினை இடித்துவிட்டு புதுப்பிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் 1023 ஏக்கர் பாசன நிலங்கள் உறுதிபடுத்தப்படும். இத்திட்டத்திற்கு நிலங்களை கையகப்படுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தின் பயன் செலவு விகிதம் 3.1 : 1. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை, 2010–2011ம் ஆண்டில், ரூ.66.00 இலட்சங்களாகும்.

2. மேற்கண்ட திட்டத்தினை 2010–2011ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வெள்ளத்தினால் பழுதடைந்த பூவந்தி ஏரியை ரூ.66.00 இலட்சம் (ரூபாய் அறுபத்தாறு இலட்சம் மட்டும்) செலவில் புதுப்பிக்கும் பணிக்கு 2010–2011ம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லறைச் செலவினம், சிறு மேற்பார்வைச் செலவுகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின்கீழ் ஏற்படும் மொத்தச் செலவுகள், மொத்தப் பணி (Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேலும், இத்திட்டப் பணிக்கான செலவினம், மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைவிட எக்காரணம் கொண்டும் அதிகரிக்க கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“4711 வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்த மூலதனச் செலவு – 01 வெள்ளக் கட்டுப்பாடு – 800 ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JF வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் – 16 பெரும் பணிகள் (கு.தொ.கு 4711 01 800 JF 1603)”

5. மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் 17.05.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் 25472 / பொ.ப. II / 2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை I), சென்னை–18.
நகல்
நிதித் (பொ.ப. II / வ.செ (பொது II)) துறை, சென்னை–9.
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை–9 (5 நகல்கள்).

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்